**வடக்கு வீதி புனரமைப்புச் செயற்திட்டம் (நாவற்குழி – காரைதீவு – மன்னார் வீதியின் 67 கிலோமீற்றர்களின் புனரமைப்பு) 2015.**

---

வடக்கு வீதி புனரமைப்புச் செயற்திட்டத்தின் (நாவற்குழி – காரைதீவு – மன்னார் வீதியின் 67 கிலோமீற்றர்களின் புனரமைப்பு) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீன ஏற்றுமதி – இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய பீஎல்ஏ 201111 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் இச் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. நாவற்குழி – காரைதீவு – மன்னார் வீதியின் 67 கிலோமீற்றர்களை புனரமைப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 56.9 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஐ.அ.டொலர் 48.3 மில்லியன் சீன ஏற்றுமதி – இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் ஆரம்ப வேலைகள் 2011 நவம்பர் 10 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2014 மே 09 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2014 மே 12 இல் கணிசமானளவு பூர்த்திசெய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக்

கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|
| | | | 2015 ஆம் ஆண்டின் போது | 2015 திசெம்பர் 31 வரை |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 48.3 | 6,532.5 | 932.02 | 6,422.28 |
| இலங்கை அரசாங்கம் | 8.6 | 1,289.8 | 21.39 | 1,247.58 |
| ஆர்டிஏ விசேட கடன் | - | - | - | 23.98 |
| | 56.9 | 7,822.3 | 953.41 | 7,693.84 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

2011 நவம்பர் 10 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த நாவற்குழி – காரைதீவு – மன்னார் வீதியின் 67 கிலோமீற்றர்களின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 2014 மே 15 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், தேசிய நியமங்கள் வரை வடக்கு மாகாணத்திலுள்ள வீதி வலையமைப்பை முன்னேற்றி பாதசாரிகள் மற்றும் சைக்கிளோட்டுபவர்களிற்கான சிறந்ததும் பாதுகாப்பானதுமான நுழைவுகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தேவைப்பட்ட தேசிய நியமங்களை கருத்திற்கொள்ளாமல் வீதியின் அகலம் 1.2 மீற்றர்களால் குறைக்கப்பட்டிருந்தது. மேலும், சங்குப்பிட்டி பாலத்தை உள்ளடக்கி 06 பாலங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளும் குறைக்கப்பட்டிருந்தன.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

2015 நவம்பர் 15 வரை 06 மாதங்களால் குறைபாட்டு அறிவித்தல் காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 மே 13 இல் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் பொறியியலாளரால் இனங்காணப்பட்ட வீதியின் 03 இடங்களிலுள்ள பூநகரிப் பிரிவின் 23+700 கிலோமீற்றர் அஸ்பால்ற் இடுதல், 03 மதகுகளின் மட்ட வித்தியாசங்கள் மற்றும் சிறுதுகள்களின் பாதுகாப்பு என்பவற்றின் மீதான குறைபாடுகளை திருத்துதல் மீதான கணக்காய்விற்கான சான்றெதுவும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

**3.4 முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்க்கப்படாத விடயங்கள்**

முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்படாதிருந்தன.

(அ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.39 மற்றும் 8.6 ஆம் பிரிவுகளிற்கு முரணாக செயற்திட்டத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பதவியணி உறுப்பினர்களிற்கு முன்னைய ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 758,439 மேந்தலைக் கிரயங்கள் மற்றும் ரூபா 629,104 மிகையூதியம் மற்றும் மருத்துவப் படி என்பவற்றை வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறவிட்டிருந்தது. மேலும் இந் நடைமுறை தொடரப்பட்டிருந்ததுடன் ரூபா 1.59 மில்லியன் மேந்தலைக் கிரயம் மற்றும் ரூபா 210,938 மிகையூதியம் மற்றும் மருத்துவப் படிகள் மீளாய்வாண்டின் போதும் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பதவியணி உறுப்பினர்களின் சம்பளம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்ட சூத்திரத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்தது.